தினமணி

## வளம் தரும் சமுதாய மீன் வளர்ப்பு

கடந்த சில ஆண்டுகளாக குறைந்த செலவிலான புதிய தொழில்நுட்ப வேளாண் முயற்சிகள் விவசாயிகளிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர், கூட்டாக சேர்ந்து செய்யும் புதிய சமுதாய அளவிலான முயற்சிகள் (New Community Initatives)பிரபலமாகி வருகிறது.

தமிழகத்தில் பல வேளாண் சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்களின் பங்களிப்புடன் சிறப்பாக, வெற்றிகரமாக பல மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள சமுதாய நாற்றங்கால் திட்டம் போன்று, கர்நாடக மாநில பாசன விவசாய அமைப்புகள் சமுதாய அளவில் மீன் வளர்ப்பில் ஈடுபட்டு அதிகளவு லாபம் சம்பாதித்து வருகின்றனர்.

பாசன முறை சமுதாய மீன் வளர்ப்பு குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

கர்நாடக மாநிலத்தில் உள்ள சோமசுந்தரா என்ற சிறிய பாசனஓடை சில ஆண்டுகளுக்கு முன்பு புறக்கணிக்கப்பட்டு இருந்தது. இத்தகைய சூழலில் நிலமில்லாத 33 குடும்பங்கள் இணைந்து கர்நாடக மாநில வேளாண்துறை பங்களிப்புடன், உலக வங்கி உதவியுடன் சமுதாய அளவில் மீன் பண்ணைகளை இங்கு அமைத்தன.

இதன் மூலம் பாசன ஓடை விவசாயிகள் சங்கம் உருவாக்கப்பட்டு கிராமத்தில் உள்ள அனைத்து விவசாய கூட்டுறவுச் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்களை இணைத்து கிராமசபையின் உதவியுடன், வருவாய் திரட்டும் வரி விதிப்பு செயல்படுத்தப்பட்டது.

பின்னர் மீன் வளர்க்கும் உரிமைகள் பெறப்பட்டு சமுதாய அளவில் மீன் வளர்க்கும் பணிகளை தொடங்கினர்.

பாசனக் குட்டையில் சுண்ணாம்பு மற்றும் இயற்கை உரங்கள் போடப்பட்டன. பல நீர்க் களைகள் அகற்றப்பட்டன. 1.25 மீட்டர் ஆழத்துக்கு மீன்குட்டைகள் அமைக்கப்பட்டன. ÷இவற்றில் கட்லா, ரோகு, கெண்டை போன்ற 1,35,000 மீன் குஞ்சுகள் குட்டைகளில் விடப்பட்டன. குறிப்பாக ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராமவாசிகள் மீன் விட்ட பின்னர் காவல் பணிகளை மேற்கொண்டனர். பின்னர் ஐந்தரை மாதங்கள் கழித்து மீன்கள் நல்ல அளவை அடைந்த உடன் பகுதி அளவில் அறுவடைப் பணிகள் தொடங்கின.ஆறு மாதத்தில் அனைத்து மீன்களும் பிடிக்கப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்பட்டன.

மீன்பிடிப்பு கூலியாக ஒரு கிலோவுக்கு ரூ.4 முதல் 5 வழங்கப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட வருவாயில் 50 சதவீதம் பாசன பயனாளிகள் சங்கத்துக்கும், மீதியுள்ள 50 சதவீதம் பணம், நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.

எட்டு மாத கால தண்ணீர் உள்ள ஓடையில் 533 கிலோ வரை மீன்கள் பெறப்பட்டு, மொத்த வருமானமாக ரூ. 2,70,000 கிடைத்துள்ளது. இவ்வாறு பாசன ஓடைகளை சரியான திட்டமிடல் மற்றும் விவசாய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சமுதாய அளவில் செயல்பட்டால் பாசன ஓடைகளை எளிதாகப் பராமரிக்கவும், அதன் வாயிலாக பல ஆக்கப்பூர்வமான பணிகள் மூலமாக கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வளர்ச்சி, தன்னிறைவு எளிதாக அடைய முடியும் என்கிறார் தி.ராஜ்பிரவீன்.

தினமலர்

## வாரச்சந்தையில் குறையாத அரிசி விலை

ஈரோடு: ஈரோடு பெரிய அக்ரஹாரத்தில் நேற்று நடந்த அரிசி சந்தையில், குறையாத விலையாலும், விற்பனையின்மையாலும், சில்லறை வியாபாரிகள் ஏமாற்றமடைந்தனர். ஈரோடு பெரிய அக்ரஹாரத்தில், பத்து ஆண்டாக வாரந்தோறும் வியாழக்கிழமையில் அரிசி சந்தை நடந்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் இருந்து, கோபி, மொடக்குறிச்சி, பெருந்துறை, சென்னிமலை, பவானி, கொடுமுடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ரைஸ் மில்களிலிருந்தும், 25,75 கிலோ அரிசி மூட்டைகளாக, "பேக்' செய்யப்பட்டு விற்பனைக்கு வருகின்றன. அரிசி மூட்டையை நேரடியாக மில் உரிமையாளர்களும், டிரேடர்களும் விற்பனை செய்வதால், இச்சந்தையில் குறைவான விலையில் அரிசி மூட்டை கிடைக்கிறது. இதனால் வாரந்தோறும் பொதுமக்களும், சிறு வியாபாரிகளும் அரிசி மூட்டையை வாங்குவதற்கு குவிந்து விடுகின்றனர். வாரந்தோறும், 3000 முதல், 3,500 வரை அரிசி மூட்டைகள் விற்பனையாகி வருகிறது. நேற்றும் வழக்கம் போல் அரிசி சந்தை கூடியது. இதில் ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகளில் இருந்தும் பொதுமக்களும், வியாபாரிகளும் கூடினர். கடந்த வாரம் விற்ற அதே விலைக்கே, அரிசி மூட்டைகள் விற்கப்பட்டதால், வியாபாரிகள் ஏமாற்றமடைந்தனர். இதுகுறித்து அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் கந்தசாமி கூறியதாவது: கடந்த வார அரிசி சந்தையில் இருந்த அதே விலை தான் தற்போதும் உள்ளது. விலையில் எந்த மாற்றமும் இல்லை. பழைய அரிசி, ஏ.டி.டி., 36, 75 கிலோ, 2,150 ரூபாய் முதல், 2,250 வரையிலும், தமிழ்நாடு பி.பி.டி., ரகம், 2,800 ரூபாய் முதல், 2,900 ரூபாய் வரையில் விற்பனையாகிறது. கர்நாடகா டீலக்ஸ், 3,000 ரூபாய் முதல், 3,050 ரூபாய் வரையில், இட்லி அரிசி குண்டு, 2,200 ரூபாய் முதல், 2,250 ரூபாய் வரையிலும், இட்லி அரிசி, 1,900 ரூபாய் முதல், 2,000 ரூபாய் வரையில் விற்பனையாகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். "கடந்த வாரத்தை போலவே, ஏ.டி.டி., 36, 43, 45 ரக அரிசி மூடைகள் வழக்கத்தை விட வரத்து அதிகமாக இருந்தது. எனினும், குறையாத அரிசி விலையால், விற்பனை பாதித்தாக,' சில்லறை வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வெற்றிலை விளைச்சல் ஜோர் அந்தியூர் விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு: ஈரோடு மாவட்டம் அந்தியூரில், வெற்றிலை விளைச்சல் ஜோராக இருப்பதாக, விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். வீட்டு விஷேச நிகழ்ச்சியின் போதும், விஷேச தினத்தின் போதும், வெற்றிலைக்கு என்றுமே தனிஇடம் உண்டு. மேலும், உண்ணும் உணவினை விரைவாக செரிக்க வைக்கும் தன்மை கொண்டது, வெற்றிலை. ஈரோடு மாவட்டம் அந்தியூர் வெற்றிலைக்கு என்றுமே தனி மவுசு உண்டு. இவ்வெற்றிலை, அதிக காரத்தன்மையும், அதிக பச்சை நிறம் கொண்டதாகவும், இருப்பதால், ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர் வெற்றிலை சிறப்பிடம் பிடித்தது. சில தினத்துக்கு முன் பெய்த தொடர் மழையால், அந்தியூர் அடுத்த எண்ணமங்கலத்தில் வெற்றிலை விளைச்சல் ஜோராக உள்ளது. இதுகுறித்து, விவசாயி முனுசாமி கூறியதாவது: பருவமழை தவறியதால், பழுப்பு, இலை சுருட்டல் நோய், வேர் அரிப்பு உள்ளிட்ட பல பிரச்னைகளால், வெற்றிலையின் விளைச்சல் பாதித்தது. விளைந்த வெற்றிலையும் போதிய விற்பனையாகாமல் இருந்ததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், அந்தியூரில் சில தினத்துக்கு முன் பெய்த தொடர் மழையால், விவசாயம் செழித்தது. அந்தியூர் வெற்றிலையின் விளைச்சலும் ஜோராக உள்ளது. எங்கள் விவசாய நிலத்தில் விளைந்த வெற்றிலை, 10,000 கவளி இருக்கும். விளைச்சல் அமோகமாக இருப்பதால், விரைவில், வெற்றிலையை அறுத்து அந்தியூர் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு செல்வோம். கடந்த மாதத்தை விட, இம்மாதத்தில் அதிக பச்சை நிறத்தோடும், காரத்தோடும், வெற்றிலை இருப்பதால், நல்ல விலை கிடைக்கும் என்று நம்புகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வாழை சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகள் கருத்தரங்கம்

குளித்தலை: வாழை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது தொடர்பாக கருத்தரங்கம் நடந்தது. குளித்தலை அருகேயுள்ள மருதூர் துரைசாமி தோட்டத்தில், வாழைசாகுபடியில் அதிக மகசூல் பெற தமிழக பாதுகாப்பு விவசாயிகள் சங்கம் சார்பில், வாழை கருத்தரங்கம் நடந்தது. உழவர் மன்ற அமைப்பாளர் கோபாலதேசிகன் தலைமை வகித்தார். வேளாண் விஞ்ஞானி

பேராசிரியர் ஜெயபாஸ்கர் பேசியதாவது: வாழை சாகுபடியில் மண் பரிசோதனை செய்து, கண் தேர்வு செய்தல், விதை நேர்த்தி, நடவு, பயிர் தயாரிப்பு, சாதாரண நடவுமுறை, அடர்வு நடவுமுறை, ஊட்டச்சத்து கண்டறிந்து பேரூட்டசத்து, நுண்ணூட்டச்சத்து, அதற்கு தேவையான அளவு (செயற்கை உரம், இயற்கை உரம்) உரமிடுமுறை, வாழையில் நோய் மற்றும் பூச்சி ஒருங்கிணைந்து பயிர் பாதுகாப்பு, வாழையில் பேரூட்டச்சத்து எடுத்துக் கொள்ளும் வழிமுறைகளில் சம அளவு உரமிடு முறைகள், சரியாக விவசாயிகள் (பின்பற்றி) வந்தால், வாழையில் அதிக மகசூல் பெற முடியும். இவ்வாறு அவர் பேசினார். கருத்தரங்கில், ஆர்.ஐ., சிவக்குமார், தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் பயன்பாடுகள், உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் அதன் குறிப்புகள் குறித்து விளக்கினார். தமிழக பாதுகாப்பு விவசாயிகள் சங்க உறுப்பினர்கள், உழவர் மன்ற அமைப்பாளர்கள், வி.ஏ.ஓ., மணி உட்பட பலர் பங்கேற்றனர்.

## இயற்கை விவசாயத்தை பேணும் வழிமுறை: கருத்தரங்கில் விளக்கம்

திருத்துறைப்பூண்டி: சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் இயற்கை விவசாயம் செய்வது குறித்த கருத்தரங்கம் திருத்துறைப்பூண்டி அருகே நடந்தது. இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நிலம், பயிர், சுற்றுச்சூழல் மாசு ஏற்படாத வகையில், இயற்கை விவசாயம் செய்வது குறித்து விவசாய கருத்தரங்கம் நடந்தது.

இயற்கை விவசாயம் பேணுவது குறித்த விளக்கம், வழிமுறை கருத்தரங்கில், மாநில வாழ்வாதார வல்லுனர் சுந்தரி தலைமை வகித்தார். மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் சுபாஸ் பாபுநாத் மங்களம் முன்னிலை வகித்தார். இயற்கை விவசாய ஆராய்ச்சி பயிற்சி மைய இயக்குனர் ஜெயராமன் பேசியதாவது:

நமது நாட்டின் உயிர்நாடியாக விவசாயம் விளங்குகிறது. இந்தியாவில் பல கிராம மக்கள் இத்தொழிலை நம்பி வாழ்வை நடத்துகின்றனர். இதில், விவசாய குடும்பத்தினருக்கு

தேவையானது போக, மீதமுள்ளவற்றை மக்களுக்கு வழங்குகின்றனர்.

இந்நிலையில் விவசாய தொழிலில் தற்போது லாபம் கிடைப்பதில்லை. நஷ்டமே ஏற்பட்டு வருகிறது. இதனால், விவசாய குடும்பங்கள் வறுமையில் வாடும் சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும் மண்ணும் மலடாகி விட்டது. உயர் நெல் ரகங்கள், வறட்சி வெள்ளத்தை தாக்குப்பிடிப்பதில்லை. இதனாலேயே விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கின்றனர்.

ஆனால், இயற்கை விவசாயத்தில் அதிக செலவில்லாமலும், எளியமுறையிலும் விவசாயம் செய்ய முடியும். அதனால், பாரம்பரிய நெல் ரகங்களை பயன்படுத்தி விவசாயிகள் உற்பத்தியை பெருக்கி லாபம் பெற வேண்டும்.

இதற்கு இடைவு பொருட்களாக, இயற்கை இடுபொருட்களான பஞ்சகவ்யா, மூலிகை பூச்சி விரட்டி, அமிர்தகரைசல் போன்றவற்றை பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும், பூச்சிகளை ஒழிக்கவும், நல்ல மகசூல் பெறவும் பயன்படுத்த வேண்டும்.

இதனால் நிலம், நீர் நிலை, சுற்றுச்சூழலும், இந்த தானிய வகைகளை உண்ணும் மனித உடல்நலத்துக்கும் கேடு ஏற்படாது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கனமழையால் விவசாயிக்கு கடும் நஷ்டம்: ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வழங்க கோரிக்கை

திருத்துறைப்பூண்டி: காவிரி டெல்டா பாசன பகுதிகளில் வறட்சி மற்றும் கனமழையால் பாதிப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என, தமிழக காங்., விவசாயிகள் பிரிவு பொதுச்செயலாளர் நெடுவை ராஜதுரை முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

நடப்பாண்டு கடும் வறட்சி ஏற்பட்டு, காவிரியில் நீரின்றி பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், ஜூன், 12க்கு மாறாக செப்., 17ம் தேதி விவசாய பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. முறை வைக்கப்பட்டு தண்ணீர் விட்டதால், கடைமடை பகுதிக்கு

முழுமையாக தண்ணீர் சென்றடையவில்லை.

இதற்கிடையில் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில், குறுவை, சம்பா பருவத்தில் நேரடி நெல்விதைப்பு மற்றும் நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து விவசாயிகளுக்கு தேவையான கடன்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்படவில்லை. மேலும், தமிழக முதல்வர் அறிவித்த சம்பா சாகுபடி சிறப்பு ஊக்குவிப்பு மானிய திட்டங்கள் அனைத்தும், முறையாக விவசாயிகளுக்கு சென்று சேரவில்லை. தற்போது, பெய்த தொடர்மழையால் பெருமழையால் நெற்பயிர்கள் பாதித்துள்ளன. இதனால், நஷ்டமடைந்துள்ள விவசாயிகளுக்கு, 20 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல, விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளடக்கிய ரேஷன்கார்டுதாரர்களுக்கு, 10 ஆயிரம் ரூபாய் வீதம் விழாக்கால ஊக்கத்தொகையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டுதோறும் வறட்சி, வெள்ளம், புயல், கனமழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் பெருமளவில் பாதிக்கப்படும் விவசாயத்தை பாதுகாக்கவும், உற்பத்தியை பெருக்கவும் தொலைநோக்கு தொழில்நுட்ப ஆலோசனையை வழங்கி, மத்திய அரசின் நிதியுதவியை பெற்று திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## விதை நெல் விற்பனைக்கு தயார்

கம்பம்: விதை நெல் விற்பனைக்கு தயார் நிலையில் இருப்பதாகவும், விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என, கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குநர் அசோகன் அறிவித்துள்ளார். கம்பம் பள்ளத்தாக்கில், இரண்டாம் போக நெல் சாகுபடிக்கென நாற்றாங்கால் தயாரிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். ஆனால் விதை நெல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் தனியார் கடைகளில் வீரிய ஒட்டுரக விதைகளை வாங்கி பயன்படுத்துகின்றனர். எனவே விவசாய அலுவலகங்களில், விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம்.ஏடிடி 39 ரக நெல் கிலோவிற்கு ரூ.7 மானியத்தில் விற்கப்படுகிறது. ஒரு கிலோ விதை ரூ. 20 க்கு கிடைக்கிறது. கடந்த ஆண்டை

காட்டிலும் மானியம் கிலோவிற்கு ரூ. 2 அதிகமாக வழங்கப்படுகிறது.வீரிய ஒட்டுரக விதை விற்பனைக்கு அரசு அனுமதி வழங்கவில்லை.

## தினகரன்

# விவசாயிகளுக்கு இ-வேளாண்மை பயிற்சி

மதுரை, : மதுரை வேளாண்மை கல்லூரி சார்பில் விவசாயிகளுக்கு இ-வேளாண்மை பயிற்சி அளிக்கப்பட்டது.

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உழவியல் துறை சார்பில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நீர்வள, நிலவள திட்டத் தின் கீழ் விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பில் திருந்திய நெல் சாகுபடி மற்றும் இ-வேளாண்மை பயிற்சி அளிக்கப்படுகிறது. மணிமுத்தாறு உபவடி நிலப்பகுதியான திருப்பத்தூர் அருகே உள்ள காவனூரில் 50 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. உழவியல் துறை தலைவர் பாலசுப்பிரமணி யன் தலைமை வகித்தார். விவசாய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு நேரடியாக மின்னஞ்சல் மற்றும் இணையதளம் மூலமாக விளக் கும் நவீன இணையதள வேளாண்மை திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

இதுகுறித்து பாலசுப்பிரமணியன் கூறுகையில், இத்திட்டத்தில் வயல்வெளி ஒருங்கிணைப்பாளர்கள் கிராமங்களில் தங்கி விவசாயிகளின் சந்தேகங்கள் மற்றும் பூச்சி, நோய் தாக்கு தலை போட்டோ எடுத்து, இன்டர்நெட் மூலமாக வேளாண் கல்லூரி நிபுணர்களுக்கு அனுப்புகின்றனர்.

நிபுணர்கள் தங்களது ஆலோசனைகளை இன்டர்நெட்டில் பதிவு செய்கின்றனர். அந்த தகவல் களை வயல்வெளி ஒருங்கிணைப்பாளர்கள் பதிவிறக்கம் செய்து விவசாயிகளுக்கு தெரிவிக்கின்றனர். இத்திட்ட த்தால் விவசாயிகளுக்கு நேர மிச்சமும், பலனும் கிடைக்கிறது என்றார்.

பயிர் நோயியல் துறை தலைவர் சங்கரலிங்கம், பூச்சியல் பேராசிரியர் சின்னையா, உதவி

பேராசிரியர் வீரபுத்திரன் ஆகியோரும் பயிற்சி அளித்தனர்.

திட்ட ஆராய்ச்சியாளர் கள் மாரிமுத்து, கேசவராஜா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# 30 டன் காய்கறிகள் விற்பனை

இடைப்பாடி, : இடைப்பாடி புதன்சந்தை நேற்று காலை கூடியது. இதில் பெங்களூர், ஊட்டி, ஈரோடு, கிருஷ்ணகிரி, ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 30 டன் காய்கறிகளை விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர்.

சந்தையில் கடந்த வாரம் சின்னவெங்காயம் கிலோ ரூ25க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்று ஞ்15க்கு விற்கப்பட்டது. இதேபோல் கடந்த வாரம் கிலோ ஞ்10க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி நேற்று ஞ்15க்கு விற்பனையானது. பெரியவெங்காயம் கடந்த வாரத்தை விட நேற்று ஞ்5 உயர்ந்து 14 ரூபாய்க்கும், முட்டைகோஸ் கடந்த வாரத்தை விட விலை 2 ரூபாய் குறைந்து ஒரு கிலோ ஞ்3க்கும், உருளைகிழங்கு கடந்த வாரத்தை விட ஞ்4 உயர்ந்து ஞ்23க்கும் விற்பனையானது. கடந்த வாரத்தை விட பெரும்பாலான காய்கறிகள் விலை அதிகமாகவே இருந்தது. கடந்த வாரத்தில் பெய்த மழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வரத்து குறைந்ததாலும், தீபாவளி நெருங்குவதாலும் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.